திரு. மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அரங்கநாதன் சட்டமன்ற உறுப்பினராக நடந்து கொள்ளவேண்டும். விதிகளைப் படித்துவிட்டு வரவேண்டும். நான் நிற்கும்போது முதலில் உட்கார வேண்டும்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு.

* வினா எண் 142—திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகளில் குடியிருப்பவர்கள் தங்களது வீட்டிற்கு மின்சாரம் அமைத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) குடிசைப்பகுதி மாற்று வாரியக்குடியிருப்புகளில் வசித்து வரும் ஒதுக்கீடுதாரர்கள், வாடகை பாக்கி ஏதும் இல்லாமல் இருந்தால், அவர்களது சொந்த செலவில் குடியிருப்புக்கு மின் வசதி செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக சென்னை மாநகரில் கட்டப்பட்ட வீடுகள் போதிய பராமரிப்பு இல்லாமல் பல இடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக சென்னை பட்டினப்பாக்கத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளைப் பராமரிக்க அலுவலர்கள் இருந்தும் கூட பராமரிக்கப்படவில்லை என்பதைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அமைச்சர் அவர்கள் தயவு செய்து அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு இனியேனும் பழுது பார்க்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொள்வது போல் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இன்று நான் போவதற்கு முன்னால் குடிசை மாற்று வாரியத் தலைவரை அனுப்பி வைக்கிறேன். தேவைப்பட்டால் நானும் போய் ஆவன செய்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.